<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

**<u>சி.சி 133/2019</u>**

**2022ம் ஆண்டு ஜூலை மாதம் 14ம்** நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா. 1** வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | பழனி | வயது: | 35 |
| த/பெ.(அ)க.பெ | பொன்னன் | தொழில்: | மேஸ்திரி |
| ஊர் : | பெரும்பள்ளி | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் பெரும்பள்ளி கிராமத்தில் வசிக்கிறேன். நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். என் தந்தையார் பெயர் பொன்னன். 4ம் எதிரி என் அப்பாவின் 2வது மனைவி. 1, 2 எதிரிகள் மேற்படி என் அப்பாவின் 2வது மனைவியின் பிள்ளைகள். எனக்கும், மேற்படி என் அப்பாவின் 2ம்தார பிள்ளைகளுக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டு அவரவர்கள் நிலத்தை அனுபவித்து வருகிறோம்.இந்நிலையில் கடந்த 18.11.2016ந் தேதி காலை 8.00 மணிக்கு நான் பெரும்பள்ளியில் எனக்கு சொந்தமான நிலத்தில் டிராக்டர் ஓட்டிக்கொண்டிருந்தேன். எதிரிகள் மோகன், மாதவன், குப்பம்மாள் ஆகியோர் வந்து நீ எப்படி டா ஏர் ஒட்டலாம் என்று என்னை தேவிடியா கையா உங்கொம்மா என்று திட்டி அதில் மோகன் தன் கையில் வைத்திருந்த கத்தியால் என் தலையில் இடது பக்கத்தில் வெட்டிவிட்டார். அப்போது அங்கு வந்த எதிரி மாதவன் தடி எடுத்துக்கொண்டு வந்து என்னை இடது கை முட்டியின் மேல் அடித்துவிட்டார். எதிரி குப்பம்மாள் அவர் வைத்திருந்த தடியால் என் முதுகின் மீது அடித்துவிட்டார். மேற்படி சம்பவத்தின் போது என் அப்பாவும் உடனிருந்தார். அப்போது அவர் எதிரிகள் தரப்பிற்கு ஆதரவாக செயல்பட்டார். அப்போது என் அம்மா வந்து மேற்படி சண்டையை தடுத்து எதிரியிடமிருந்து என்னை மீட்டார்கள். அதன்பிறகு ரத்தம் வழிந்து கொண்டிருந்த என்னை எங்கள் ஊர் சுப்பிரமணி மற்றும் தங்கராஜ் ஆகியோர் சம்பவ இடத்திலிருந்து ஆம்புலன்ஸ் மூலமாக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் மேற்படி சிகிச்சையில் இருந்த போது திருப்பத்தூர் கிராமிய போலீஸார் என்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அதிலுள்ள கையெழுத்து

என்னுடையது தான். மேற்படி புகார் வாககுமூலம் அ.த.சா.ஆ 1 ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வெட்டுக்கத்தி தான் அன்று என்னை வெட்ட பயன்படுத்தியது. அது சா.பொ. 1 ஆகும். வழக்கு சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி:-

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யாப்படாமல் முடிக்கப்பட்டது.

<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

**<u>சி.சி 133/2019</u>**

**2022ம் ஆண்டு ஜுலை மாதம் 14ம்** நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா. 2** வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. எஸ். பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | பரமேஸ்வரி | வயது: | 50 |
| த/பெ.(அ)க.பெ | பொன்னன் | தொழில்: | மேஸ்திரி |
| ஊர் : | பெரும்பள்ளி | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை:

நான் பெரும்பள்ளி கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். என் கணவர் பெயர் பொன்னன். 4ம் எதிரி குப்பம்மாள் என் கணவரின் 2வது மனைவி. மோகன் மற்றும் மாதவன் ஆகியோர் குப்பம்மாளின் பிள்ளைகள். அ.சா.1 என்னுடைய மகன். எங்களுக்கும், மேற்படி குப்பம்மாள் மகன்களுக்கு இடையே நிலத்தகராறு சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது. இந்நிலையில் 18.11.2016 அன்று காலை 8.00 மணியளவில் என் மகன் பழனி எங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கழனியில் டிராக்டர் வைத்து ஏர் ஓட்டி கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்தஎதிரி மோகன் மற்றும் மாதவன் ஆகியோர் என் மகனை அசிங்கமாக திட்டி அதில் மோகன் என் மகனை வெட்டுக்கத்தியால் இடது பக்க தலையில் வெட்டி விட்டார். மாதவன் அப்போது என் மகனை தடியால் இடது கையில் அடித்து விட்டார். மேற்படி சம்பவத்தில் குப்பம்மாள் என் மகன் பழனியை முதுகில் தடியால் அடித்துவிட்டார். அப்போது இறந்துவிட்ட என் கணவர் பொன்னன் அவர்களுக்கு ஆதரவாக இருந்து செயல்பட்டார். மேற்படி அடிப்பட்ட எனது மகனை நானும், தங்கராஜ், சுப்பிரமணி ஆகியோர் எதிரிகளிடமிருந்து மீட்டு ஆம்புலன்ஸில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று அட்மிட் செய்தோம். மேற்படி எதிரிகள் மருத்துவமனைக்கு வந்து என் மகன் அட்மிட் ஆன பிறகும் குத்தி கொலை செய்து விடுவேன் என்று எதிரிகள் மிரட்டினார்கள். என் மகனை சம்பவத்தின் போது மோகன் வெட்டிய கத்தி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே சா.பொ. 1 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது.போலீஸார் என்னை விசாரித்தனர்.

எ.த.கு.வி:-

எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யாப்படாமல் முடிக்கப்பட்டது.